"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி | மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும் | வெகுஜன விரோதி"

மலர் 36 } யாழ்ப்பாணம், வயாவிளான் வெகுதானியஸு வைகாசிமீ ௧௨-ந் உ. (25-5-38) புதன்கிழமை { இதழ் 11

### தோத்திரம்

வாதுக்குச் சண்டைக்குப் போவர் வருவர் வழக்குரைப்பர்
தீதுக் குதவியுஞ் செய்திடு வார்தினம்தேடியொன்றை
மாதுக் களித்து மயங்கிடு வார்விதி வாழுமட்டும்
ஏதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே

# மனுநீதிகாதல்

### காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்ச்சற்குருவை நிகழ்த்துங்கொடுங்காலம்
பெரியோரைத்தூஷணித்துப் பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைநிந்தனையா யகம்பேசுமிக்காலம்
மெய்யேபொய்யாங்கால மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப் பொருந்துமிதுகாலம்
வன்சமரிலோடினவர் வரிசைபெறுங்காலம்
அஞ்சியேயாணடங்கி அரிவையர்மேலாங்காலம்
இன்பமுறு நூல்படித்தா லிகழ்ச்சிபுகல்காலம்
பண்பில்லாநையாண்டிப் பாட்டைமெய்க்குந்தூற்காலம்
இனிதானசற்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குமுதவுங்காலம்
பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம்
ஆனகலிகாலத் தடைவிதுவேயானலு
மானபரனைவனும் வையகத்திலுண்டெனலாம்
இறப்பார்க்கொருகடனு மெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம்
ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன்றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம்
தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகள்வாய்க்குங்காலம்
சுகமாய்க்குடிப்பிறந்த சுதாகாரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம்
கொண்டபெண்ணைவிட்டுக் கொடியவிபசார
முண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம்
சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்திபகலூர்சுற்றும் அவசாரிக்காங்காலம்
மேற்குலமுங்கீழ்குலமும் விபசாரமெத்தமிஞ்சி
வாகுபெறும்வேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம்
பிள்ளைவயதில்மிகுத்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சீஷன்குருவைத்தேடான்
பெண்டானவல்லியவள் பேச்சில்மிகுத்தாக்கால்
கொண்டகணவனையுங் குறியாகவெண்ணாளாம்
பாரோர்கணேப்தீர்ந்தாற் பண்டிதரைத்தேடார்கள்
சீரார்செல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள்
தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும்
தெய்வநிகரான தேசிகனுர்தன்றேவி
யைவரையுந்தாயென் றருளினார்முன்னாலோர்
பெற்றமகள்போலவுமே பேணிமருமகளை
வைத்தாதரித்துவரு மாமியேதாயாகும்
தந்தைதனக்கிளைய தாரமந்தக்கைகேசி
பிந்தவருஞ்சித்ராங்கி பிள்ளைகட்குச்சத்ராதி
பின்தாரப்பிள்ளையென்று பேதகமில்லாதமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம்

### பிதா.

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமயனுடன் மாமன்வளர்த்தவரும்
வித்தைவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருமாபத்து வரும்போதுகாத்தவரும்
ஓரொன்பதுபேரு முற்றபிதாவாமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும்
கல்விவருவித்துக் கடனென்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்த திறலானோர்தந்தையுமாம்

### மைந்தர்.

அற்பராம்நூறுபிள்ளை யானாலும்பெற்றுமென்ன
சற்புத்ரனென்றொருவற் றலைமுறையெல்லாம்விளங்கும்
தந்தைதாய்வாக்யந் தமயன்குருவாக்யம்
சிந்தைதனிற்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன்
இத்தகைமையாருடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும்
எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வும் போசனமுநஞ்சாகும்
தந்தைதாய்வாக்யமது தலைப்பரிபாலித்தோர்
நந்தாத்தசரதனும் ராசகுமாரனென்பர்
பிதாவுடையநல்வாக்யம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரரில்மிக்க சுதன்பரசுராமனென்பார்
ஆசான்றன்வாக்ய மனுவுந்தவறுதான்
வாசாலன்சத்யமுள்ள வாய்மையரிச்சந்திரனும்
தமயனுரைதட்டாத சற்புத்திரராமேனோர்
தமையுமங்கேசீர்தூக்கிற் றருமனுக்குநேரிளையோர்
தந்தைபேர்தன்பேருந் தாரணியிலேவிளங்கத்
தந்தைதாய்சொல்மறுக்காத் தன்மைபோன்புத்திரனும்
தந்தைக்கிசைந்தமறு தாரமேதன்றாய்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார்
நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிந்திலுற்ற சுதாலறிந்திடலாம்.

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங் கொள்ளா ரறிவுடையார்



துதிவெண்பா.

*ஞானஞ் சுகநிதியம் நல்லாயுள் தாவயவை*
*ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்*
*பேர்க்குமா னச்சியந்த்ரம் பீடுபெற்றுநிற்*
*சீர்த்தியுடன் வந்து செகம் [கவெற்குச்*

# சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்

வெகுதானிய௵ வைகாசி௴ ௧௨௨

## அகில இலங்கைக் கமத்தொழில், கைத்தொழிற் பொருட்காட்சி

நமது யாழ்ப்பாணத்திலே சென்ற வாரம் சம்பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப் பொருட்காட்சி நடைபெற்றது யாவருமறிவர். யாழ்ப்பாணத்தில் முன் எத்தனையோ காட்சிகள் காட்டப்பட்டபோதிலும் இக்காட்சியைப்போல் ஒன்றுவது இருந்திருக்கவில்லையென்று கூறுவது தவறாக மாட்டாதென்றே நம்புகிறோம்.

பொருட்காட்சியை நடாத்துவது கமக்காரருக்கும் தொழிலாளிகளுக்கும் உற்சாகத்தை யூட்டுமென்பது மறுக்கொணு வுண்மையாகும். யாழ்ப்பாணத்தில் நடந்த பொருட் காட்சியில் யாழ்ப்பாண விளை பொருட்கள் அநேகம் காணப்புட்டன. எல்லாவற்றிலும் மேலாக மதிக்கப்படத்தக்கது யாதெனில் பனையினின்று பெறப்படும் பொருட்கள் யாவும் காட்சிக்கு வைக்கப்பட்டமையேயாகும். யாழ்ப்பாணத்தவர்களுக்கு இதுபுதிதல்லவாயினும் சிங்களவர், முதலிய பிறசாதி மக்கள் பனையின் அருமை பெருமைகளை அறிந்துகொள்வதற்கு இதுவோர் ஏற்ற தருணமாகும் என்பதில் ஐயமில்லை. பனம் பழம், ஒடியல், பனாட்டு, கருப்பநீர் முதலியவற்றை உண்ணல் நாகரீகக் குறைவென நினைக்கும் நம் நாட்டு வாலிபர்க்கிதுவோர் நன்முன்மாதிரி காட்டுவதா யிருக்குமென்பது கவனிக்கத் தக்கது. தமது பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து இப் பொருட் காட்சியைச் சென்று பார்த்த நம்மவர் பார்த்தளவோடமையாது, பார்த்ததனாலாம்பயனைச் செய்கைமுறை மூலம் பெற்றுக் கொள்ளுதல் நலமாகும். ஆங்கிலம்படித்து உத்தியோகம் பார்க்கும் நம்மவரெல்லாம் பனம் பழம் பனாட்டு முதலியவற்றைக் கூசாது உண்ணல் வேண்டும். ஓர் காலத்தில் ஏழைகளுக்குப் பெரும் ஆதரவளித்த பனைமரப் பிரயோசனங்கள் இன்று அவ்வேழை மக்களாலும் உதாசினஞ் செய்யப்படுவது வருந்தத்தக்க தோன்றாகும். படித்த வகுப்பார் பனைப் பிரயோசனங்களை உபயோகித்து அதன் மூலம் ஏழைகளுக்கும் ஓர் சிறந்த பாடம் கற்பிக்க வேண்டும். பொருட்காட்சியில் பனை ஸ்தானம் வகித்தது மகிழ்தற்குரியதேயாகும்.

இக்காட்சியில் வைக்கப்பட்ட கைத்தொழிற் பொருட்களும் பாராட்டப்படற் குரியனவேயாகும். இலங்கையிற் கைத்தொழில் விருத்தியாவதற்கு இதுவோர் அறிகுறியாகும் காட்சியளவோடு திருப்தியடையாது கைத்தொழிலை விருத்தி செய்ய ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும்.

"தேக சுகத்துக்காகத் தேயிலையைக் குடி" என்ற ஒரு விளம்பரமும் காட்சியிற் காணப்பட்டது. இலங்கைத் தேயிலையை விலைப்படுத்துவதற்கிது சிறந்த முறையாயிருப்பினும் சுகாதார முறைக்கு ஏற்புடைத்தன்று என்பதும் எமது அபிப்பிராயமாக விருக்கின்றது.

பொதுவாகக் கூறுமிடத்து இப்பொருட்காட்சி யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் புத்துணர்ச்சியை யுண்டாக்கி யிருக்கின்றதெனக் கூறலாம். எனினும் (Merry go road) ஆநந்த வட்டவோட்டம் மூலம் நம்மவர் பணம் பிறர் கையிற் புகுந்து விட்டதெனவும் கூறுதற் கிடமுண்டு.

இக்காட்சியில் வைக்கப்பட்ட பொருள்களுள் மதிப்புடையதாகக் காணப்பட்டவற்றிற்கு மெரில் கொடுக்கப்பட்டிருக்கிறதாக அறிகிறேம்.

எங்கள் வலிகாமம் வடக்குக் கிழக்கு மணியகாரன் அவர்களின் பந்தலில் சில நூதனக் காட்சிகளும் பாவைக்கூத்து முதலியனவும் விசேடமாகக் காட்டப்பட்டன.

வயாவிளான் கிழக்கு வாசராகிய வைத்தியர் திரு. S. தம்பிப்பிள்ளையாலும் அவரது சகோதரர்களாலும் நடத்தப்பட்ட பாவைக் கூத்தை வியந்து, எங்கள் வடமாகாண ஏசன்றர் கனம். E T. டைசன் அவர்களால் ஓர் (பரிசு) மெரில் வழங்கப்பட்டதென அறிகிறேம.

இந்தக் காட்சியைச் சிறப்புற நடாத்திய ஒவ்வொரு பிரிவு மணியகாரர்களுக்கும் விசேஷமான பொருள்களை வருவித்துக்கொடுத்த மற்றும் தலைமைக்காரருக்கும் ஏனைய உத்தியோகஸ்தருக்கும் எமதும் மற்றும் தொழிலாளரதும் நன்றியுரியதாகுக.

---

### காலநிலை

*மழையில்லை. வெயிலகோரம் அதிகம். தென்றற்காற்று வீசுவதினால் சற்றுச்சாந்தியாகவிருக்கிறது. இருந்தாலும், சின்னமுத்து, கொப்பிளிப்பான், கூகைக்கட்டு முதலிய நோய்கள் இடைக்கிடையிருக்கின்றன.*

### பார்வதீ - பரமேசுவரர்களின் திருவூடல்

*இப்பெயரிய நூற் பிரதியொன்று வரப்பெற்றேம். இது கண்டனூர் சிவஸ்ரீ. இராமநாதக்குருக்கள் அவர்கள் இயற்றிய தமிழுரையோடு யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களால் பரிசோதிக்கப்பட்டு, பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது.*

*இதிலுள்ள-நூல், சமஸ்கிருதத்திலும் உரை-தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது. அனுப்பிய பிரதிக்காகத் துதி கூறுகின்றேம்.*

## குடியின் கொடுமை

*இப்புவிமாந்தர் இயற்றுபாதகங்களுட்*
*டப்புளதிதுவெனப் பெரியோர்சாற்றும்*
*குடிவெறியின்செயல் கூறுந்தரத்ததோ ?*
*குடிப்பவன்தனது குடும்பம்படும்பெரும்*
*பாட்டினையறிந்தும் பறுவாயின்றிக்*
*கேட்டினை விளைக்குமிக் கெட்டதொழில்தனைக்*
*கைவிடாமற்கொலை களவுகரவு*
*பொய்மொழிபகர்தல் புலாலருந்திடுதல்*
*குருவைநிந்தித்தல் கோதையர்பிறரை*
*மருவியவர்தம் மகிமையைக்குறைத்தல்*
*கடுமொழிபகர்தல் கலகமுண்டாக்குதல்*
*நடுவுரைதணத்தல் நன்றிமறத்தல்*
*இல்லாவழக்குகளெடுத்துப்பேசி*
*எல்லார்க்குந்துயர் ஈட்டித்திரிதல்*
*தான்கெடுவதுபோற் பிறருங்கெட்டுக்*
*கான்படுகண்ணியின் மான்படுமாறுபோற்*
*கலங்கச்செய்தும், கருணையில்காட்டு*
*விலங்கினைப்போலே மேலேபாய்ந்து*
*பிடித்துக்கடித்தும் பெருமதங்கொண்டு*
*அடித்துஉதைத்து அவலங்கள்செய்தும்*
*கத்திவாள்கிறிசு கையினிலெடுத்துக்*
*குத்திவெட்டிக் கொலைகள்புரிந்தும்*
*அரசினராற்பிடித் தடைக்கப்பட்டுச்*
*சிறைபுகுந்தும்பணத் தெண்டங்கொடுத்தும்*
*கையிற்பணமுங் காணிகள்மற்றும்*
*மெய்யணிபணிகளும் வீணுபழிந்திட*
*மனைவியும்மக்களும் மனந்திகிலடைந்து*
*கனவிலும்நினைவிலுங் கண்ணீர்சொரிந்து*
*வருந்துமிவர்களை மாநிலத்துள்ளோர்*
*இருந்துகண்டு ஏளனஞ்செய்வதைக்*
*குடித்துக்கெட்டுக் குலத்தைக்கெடுத்த*
*மிடிப்பயல்காணிலென் விளம்பிடுவானோ ?*
*மெய்யாய்க்குடியினால் வெறுவிலியானோர்*
*ஐயோ ! உலகினில் ஆயிரகோடியே ! !*
*இன்னோர்செயலை யிருப்பவர்கண்டும்*
*பின்னும்விடாராய்ப் பித்துக்கொண்டு*
*அழிகிறார்முன்னர் அலைகிறார்பின்னர்*
*விழிகிறார்பிச்சை வேண்டிப்புசிக்கிறார்*
*இவர் செயல்:*
*விளக்கினைப்பிடித்துக் கிணற்றினுள்வீழும்*
*மூழப்பயித்தியமுள மூடரின்செயலே !*
*வீதிகடோறும் விழுந்திடுமிவர்க்குச்*
*சாதிதானேது ? சமயமேது ?*
*நீதிதானேது ? நியதிதானேது ?*
*ஞாதிதானேது : நல்லறிவேது ?*
*பத்தியேது பார்த்திடுமலுவலிற்*
*சித்தியேது திறமைதானேது ?*
*வித்தைதானேது விழிவடைந்திடுநாள்*
*முத்தியேது முடிவுதானேது ?*
*பின்னை :*
*மூன்வினைப்பயனின் முடிவேயென்று*
*நன்மைசேர்பெரியோர் நவின்றிடுவாரே ;*

### ஸ்ரீமான். க. முருகேசு அவர்கள்

*யாழ்ப்பாணத்து நவிண்டில் வாசரும், மலாய்நாட்டில் P.W.D. ஓவசியராகவிருந்து சன்மானம்பெற்று விளங்குபவருமான இவர் சிலமாச லீவில், தமது சென்மஸ்தானத்துக்கு வந்து மனைமகார் சுற்றத்தாருடன் வசிக்கின்றாரென அறிகின்றேம். சுபம்.*

### கொக்குவிலிற் கொலை

*கொக்குவிலிலுள்ள முத்துவேலு ஞானசேகரமும், மார்க்கண்டு என்னும் ஒருவருங் கூடி அவ்வூரிலுள்ள கார்த்திகேசு முத்து என்னும் ஒரு பெலசாலியை வில்லுக்கத்தியாற் பல காயங்கள் வரக்குற்றியும், கட்டையினால் அடித்தும் விட்டு ஓடிவிட்டார்களாம். காயமடைந்த முத்து என்பவர் இறந்துவிட்டாரென்றும் மரணவிசாரணை நடந்ததென்றும் அறிகின்றேம்.*

### கார் விபத்து

*சுன்னாகத்திலுள்ள சின்னத்தம்பியென்னும் ஒருவர் தனது கார் வண்டியைச் செலுத்தி யாழ்ப்பாணம் போகுந் தருணத்தில் தாவடி முனியப்பர் கோவிலடியிலுள்ள ஒரு மரத்தில் கார் மோதுண்டு அதனுள்ளிருந்த மூவர்க்குச் சீவமோசமான காயங்கள் ஏற்பட்டதினால் ஒரு மனுஷி இறந்துபோனதாகவும் மற்றோர் ஆஸ்பத்திரியிலிருப்பதாகவும் அறிகின்றேம்.*

## J. P. பட்டம்

*வலிகாமம் வடக்குப்பகுதிக்குப் புதியவோர் சமாதான நீதிவான் தேவையானதால், காலஞ்சென்ற திரு. வ. குமாரசுவாமி அவர்களினிடமாக பிறக்றர் திரு. தெ. சி. இராசரத்தின மவர்களை அரசினர் நியமித்திருக்கின்றனர்.*

வயாவிளான்

## வாலிபர் சங்கம்

குறித்த சங்கத்தின் பதினாறாவது வருடாந்தக்கூட்டம் நிகழும் வெகுதானிய வருஷ சித்திரைமீ உடுத் திகதி (7-5-38) சனிக்கிழமை இரவு 7 மணியளவில் சங்க வாசிகசாலை மண்டபத்தில், திரு. சி. கதிரிப்பிள்ளை அவர்களின் தலைமையில் தேவாரத்துடன் ஆரம்பமாயிற்று. முதலாவதாகச் சென்ற வருடாந்தக்கூட்ட நிகழ்ச்சி அறிக்கையும் 16-ம் ஆண்டிற்குரிய அறிக்கையும் காரியதரிசியாலும், வரவு செலவு விபரம் தனாதிகாரியாலும் வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஒப்புக்கொள்ளப்பெற்றன. பின்னர், புதிய ஆண்டுக்குரிய பணியாளர் தெரிவுசெய்யப்பட்டதும் இரவு 8-30 மணியளவில் தேவாரத்துடன் கூட்டம் இனிது முடிவெய்தியது. தெரிவு பின்வருமாறு:—

போஷகர்கள்: திருவாளர்கள். க. வே. சுப்பிரமணியம், சி. நல்லதம்பி, சி. கதிரிப்பிள்ளை, ச. கணபதிப்பிள்ளை, இ. இரத்தினசபாபதி, கா. ஆறுமுகம், வ. சின்னக்குட்டி; தலைவர்: திரு. கா. த. முத்தையா; உபதலைவர்கள்: திரு. ஆ. சரவணமுத்து, திரு. சி. இராமலிங்கம்; இணைச்செயலாளர்: திரு. செ. சின்னத்துரை, திரு. ந. நமசிவாயம்; தனாதிகாரி: திரு. கு. வல்லிபுரம்; உபதனாதிகாரி: திரு. ச. செல்லத்துரை; பரிசோதகர்கள்: திரு. ந. வராசசிங்கம், திரு. கு. பொன்னம்பலம்; வாசிகசாலைப்பாதுகாப்பாளன்: திரு. க. க. சுப்பிரமணியம்; உபபாதுகாப்பாளன்: திரு. சி. தியாகராசா; நிருவாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: த. நடராசா, சி. செல்லப்பா, ஆ. செல்லத்துரை, கா. வேலுப்பிள்ளை, நா. கந்தையா, க. கதிரித்தம்பி.

அடுத்த ருகவ (13-5-38) ஆகிய வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணியளவில், அமெரிக்கன்மிஷன் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில், மேற்படி சங்கத்தின் 16-வது ஆண்டு நிறைவுவிழா தேவாரத்துடன் ஆரம்பமாயது. அப்போது, மாணவன் திரு. ச. செல்லத்துரை அவர்களால் வந்தனோபசாரப்பாட்டுப்படிக்கப்பட்டதும், திரு. கா. த. முத்தையா அவர்களின் வரவேற்புரையின்பின், மயிலிட்டிக் கிராமசங்கத் தலைவரும், திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை அதிபருமாகிய திரு. சி. சுவாமிநாதன் B. A., அவர்கள் தலைமை வகித்தார். பின்னர், மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. வீ. வீரசிங்கம் B A., அவர்கள், "வாலிபர் தர்மம்" என்னும் விஷயமாகவும், தெல்லிப்பழை நியாயவாதி திரு. கு. வன்னியசிங்கம் B.A., அவர்கள் "சுப்பிரமணிய பாரதியார்" என்னும் விஷயமாகவும் விரிவுரை நிகழ்த்தினர். அடுத்தபடியாக, விவேகானந்தசபைச் சமயபாடப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்க்கு மேற்படி சபையாரால் அளிக்கப்பட்ட தராதரப் பத்திரங்களும் கமச்செய்கை சம்பந்தமாக அரசினரால் அளிக்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களும் அவரவர்க்குத் தலைவரால் வழங்கப்பெற்றதும், "ஈழகேசரி" ஆசிரியர் திரு. நா. பொன்னையா அவர்களாலும், சட்டமாணவர் திரு. வ. இராசநாயகம் அவர்களாலும், குறிப்புரை கூறப்பட்டன. இறுதியாக, தலைவர் முடிவுரை நிகழ்ந்ததும், தேவார பாராயணத்துடன் விழா 10-30 மணியளவில் இனிது நிறைவெய்தியது.

—கடித.

## ஜப்பானியர் முன்னேற்றம் தடை

### சீனர் ஓர் நகரைக் கைப்பற்றினர்

லுங்கை ரெயில்வேப் பக்கமாக ஜப்பானியரின் முன்னேற்றம் உண்மையில் தடைப்பட்டிருப்பதாகச் சீனச் செய்திகள் கூறுகின்றன. சீனப் படைகள் ஜப்பானியரை எதிர்த்துத் தாக்கி லாங்பெங்குக்கு கிழக்கிலுள்ள லீஹான் ஸ்டேஷனைத் திருப்பிக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

சீன மத்திய சர்க்கார் துருப்புகளுட்பட சூச்சோ எல்லையிலுள்ள முக்கியமான சீனத் துருப்புகள் லுங்கை ரெயில்வே துண்டிக்கப்படுமுன் தப்பிக் கொள்வதற்காகப் பின் வாங்கிவிட முயற்சிப்பதாகத் தெரிகிறது.

## விமானப்படை எடுப்புத்தடை

### பிரிட்டனின் புதிய ஏற்பாடு

விமான யுத்தப் பாதுகாப்புத் தொண்டர்களைப் பயிற்றுவிக்க யோக்கியதையுள்ள போதனாசிரியர்களின் தொகையை அதிகரிக்க உள்நாட்டு மந்திரி காரியாலயம் ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்துளது.

விமான யுத்தப் பாதுகாப்புச் சம்பந்தமாகத் தனது அங்கத்தினர்களுக்குத் தகவல்களைத் தயாரிக்க ஸிவில் எஞ்ஜினியர்கள் ஸ்தாபனம் உள்நாட்டு மந்திரி காரியாலத்தின் அனுமதியுடன் ஒரு கமிட்டியை நியமித்துளது.

## 5000 பேர் வீடின்றித் தவிக்கின்றனர்

மூர் நதியில் பிரவாகம் ஏற்பட்டு ஸ்டைரியா; கரின்தியா என்ற விடங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டதுபற்றிக் கூறும் செய்திகளைத் தணிக்கச் செய்வதைக்குறித்து இங்குள்ள அதிகாரிகள் ஆட்சேபனை செய்கிறார்கள்.

இந்த வெள்ளத்தால் இறந்த 17 பேர்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனர். மொத்தம் இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றி மதிப்பிடுவது மிக அசாத்தியமாக விருக்கிறது.

டெலிபோன் தந்தி போக்குவரத்துகள் தடைப்பட்டன.

வெள்ளத்தால் சூழப்பட்ட விடங்களில் தத்தளிக்கும் ஜனங்களுக்கு உணவு அளிக்க விமானங்கள் உபயோகிக்கப் படுகின்றன. குறைந்தது 5000 பேர் வீடில்லாது தத்தளிக்கின்றனர்.

## விவசாய மந்திரியின் அபிப்பிராயங்கள்

இலங்கை ஒரு விவசாய நாடு. நமது வருமானம் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும், 35 லக்ஷம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் தான் இலங்கையில் விவசாயம் நடக்கின்றது. 55 லக்ஷம் பேர்களை ஜனத்தொகையாகக் கொண்ட இந்நாட்டில் தலைக்குக் கிட்டத்தட்ட அரைஏக்கர் நிலம் தான் சாகுபடியாகின்றது. விவசாயத்தையே ஜீவனமார்க்கமாகக் கொண்டிருக்கும் இந்நாட்டு மக்கள் இன்னும் அதிகமான பூமியில் சாகுபடி செய்ய வேண்டும். இன்றேல் அவர்களிடையே ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குப் பரிகாரம்செய்ய புதிய வரிகளை விதிக்கவேண்டிய அவசியமுண்டாகும்.

## கர்ப்பமாது சிசுபரிபாலனசாலை

சென்றமாதம் 16-ந் திகதி (28-4-38) வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்குச் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில், கர்ப்பஸ்திரிகளுக்கும் சிசுக்களுக்கும் வேண்டிய உதவிசெய்யும் நோக்கத்துடன் பிரத்தியேகம் பண்ணப்பட்ட மண்டபம் வெகுசனர் மத்தியில் வடமாகாண அதிபர் திரு. E. T. டைசன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

## முதல் டக்டர் மாது

காலஞ்சென்ற டக்டர். சி. என். வேதவனம் அவர்களின் புதல்வியான டக்டர். ரனிதா எனும் மாது சமீபத்தில் லண்டன் சர்வகலாசாலையின் எம். ஆர் சி. பி. எனும் வைத்திய பட்ட பரீட்சையில் அரங்கேறியிருக்கின்றார். இவர் முந்திச் சென்னைச் சர்வகலாசாலையிற்சேர்ந்து வைத்திய சாஸ்திரங் கற்று எம். பி., பி. எஸ். எனும் பட்டங்கள் பெற்றபின்னர் 1936-ம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்று, அங்கே சென்ற பன்னிரு மாசங்களுக்கிடையில் எம். ஆர். சி. எஸ். எனும் பட்டமும், டி. சி. ஏ. ஜி. எனும் பட்டமும் பெற்றுக்கொண்டனர். எம். ஆர். சி. பி. எனும் பட்டம் பெற்றுக்கொண்ட முதல் இலங்கைப் பெண்மணி இவரேயாம்.

## வர்த்தகநிலைமை

சென்ற வருடம் இலங்கையிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளின் மதிப்பு 1936-ம் வருடத்தைவிட 635 லட்சம் ரூபாய் அதிகரித்திருக்கின்றது. இறக்குமதி 285 லட்சம் ரூபாய் அதிகரித்திருக்கின்றது. தேயிலைக்கு நல்லவிலை கிடைத்ததும், ஏராளமான ரப்பரும் தெங்கு பொருள்களும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டதுந்தான் ஏற்றுமதியின் மொத்தமதிப்புத்தான் சென்ற வருடம் அதிகரித்திருப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

## மும்முறைசெத்துப்பிழைத்த குழந்தை

குவாலியரில் ஓர் குழந்தை 3 முறை இறந்து மயானம் சென்றவுடன் உயிர்பெற்றது. முதலில் இறந்ததும் மயானத்திற்கு அது கொண்டுபோகப்பட்டது. உடனே குவா, குவா, என்று அழுதது. பின்பு குழந்தை வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டதும் மீண்டும் அதற்கு பிரக்ஞை இல்லை. மறுபடியும் மயானத்திற்குக் கொண்டுபோகப்பட்டது. சவக்குழியில் கள்ளும் சமயத்தில் அது அழத்தொடங்கிவிட்டது. அப்பொழுது அக்குழந்தை வீட்டிற்குக் கொண்டுபோகப்பட்டது. உடனே அது உயிர்விட்டது. மூன்றும் முறையாகச் சுடுகாட்டிற்கு அது கொண்டுபோகப்பட்டபோது உயிர்பெற்றது.

## குரக்கனின் குண விசேஷம்

அரசாங்க வர்த்தகப்பகுதிக் கொம்மிஷனராகிய திரு. ஆர். எச். பசெற் அவர்கள் சென்ற வியாழக்கிழமை இரவு கொழும்பிலே ஆகாயவசனிமூலம் பேசியபோது குரக்கனின் குணவிசேஷங்களைப்பற்றிக் குறிப்பிட்டதாவது: குரக்கன் உயர்ந்த போஷணைக்குரியபொருட்களை மிகப் பெருந்தொகையான விதமாய் அடக்கியுள்ளது நல்ல செழிப்பான அல்லது செழிப்பற்ற நிலம் எதிலும் செய்கைபண்ணப்படத்தக்கது ஏக்கரொன்றுக்கு 700 முதல் 1000 றாத்தல் வரையிலே அதாவது 12 முதல் 16 புசல் வரையிலே அது விளைகின்றது. அது மூன்று அல்லது நான்கு மாதத்தில் வளர்ந்து பலன்தரக்கூடிய ஓர் பயிராகும். கறுத்த அப்பத்துக்கென்று அத்துணை பெருந்தொகையாக இறக்குமதிசெய்யப்படுகின்ற தவிட்டிலும்பார்க்க குரக்கன் எல்லாவகையாலும் மிகச் சிறந்தவோர் உணவாகும். குரக்கனைக்கொண்டு அநேகவகையான போசனங்களைத் தயாரிக்கலாம். குரக்கன் பாவனையை விருத்திக்குக் கொண்டுவரும் முயற்சி இற்றைக்கு இரு வருடங்களின் முன்னே அரசாங்க வர்த்தகப்பகுதியால்எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்போது குரக்கன் நன்றாக விலைப்பட்டு வருகின்றது.

## ஐயவினா?

அறிஞர்களே!

ஒருதகப்பன் பிள்ளைகளான இரு சகோதரர்களுள், இளைய சகோதரனது மகனுக்கு ஒருபெண் குழந்தை பிறந்திருக்க, மூத்த சகோதரனின் மகனுக்கு இந்த ஆசௌசம் உண்டா அல்லது இல்லையா என்பதை அறிவதற்கு விரும்புகிறேன். ஆகவின் குருக்கள்மாராவது, அறிஞர்களாவது இதற்குப் பதில் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓர் சைவாபிமானி

## வினா

வஇவஇவசாய்ந்தவஇகங்கலஇ
தாஇதாஇஞாக்கியதுடையடிமேல்
பாதஇக௦இஅஇபசும்பொன்இ
சுஇளஇதில்லையம்பலத்தாடியநிஇ

இச்செய்யுளை முற்றும் எழுத்துக்களால் எழுதி உரையும் எழுதி இப்பத்திரிகையில் வெளிவிடும்படி கேட்கிறேன்.

ஆ. சபாரத்தினக்குருக்கள்.
துன்னாலையம்
வடசாகை.

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் கற்றா ரனைத்திலர் பாடு.

## வண. S. A. பென்சமீன் சுவாமியவர்களின் தேகவியோகம்

நெடுநாட்களாகச் சுகவீனமுற்றிருந்து தக்க வைத்திய சிகிச்சைகள் செய்வித்துங் குணமுருது, கடைசித் தேவதிரவிய அனுமானங்களெல்லாம் பெற்று சென்ற 13-ந் திகதி வெள்ளிக்கிழமை சாயாட்சை மூன்றுமணியளவில் படைத்தோன் கரத்தில் தமதான்மாவை ஒப்படைத்தார். இவ்வரிய குரவர் இறந்தாரென்ற செய்தி கேள்விப்பட்டவுடனே எல்லோரும் பெருமூச்சுடன் கண்ணீர் சொரிந்து புலம்பி அவர் இல்லுக்கேகி அவர் முகத்தைத் தரிசித்து தங்கள் தங்கள் ஆகுலத்தை ஒப்பாரியாய்ப் பாடினார்கள்.

பின்னர் 4 மணியளவில் 25 பேருக்குமேற்பட்டகுருமாரும் சஞ்சுசையப்பர் கூட்டச் சன்னுசியர்களும் கன்னிகாஸ்திரிமாரும், பற்பல கூட்டத்தவரும் பல இடங்களிலுமிருந்து வந்த அவரது இனத்தவர்களும், சினேகிதரும் அவரது மீசாமிலுள்ள எண்ணடங்காக் கிறீஸ்தவர்களும் பின்தொடர குருமார் துக்கசங்கிதம் பாடிச்செல்ல, அவரது தேகத்தை அழகிய வண்டியின்மீது வைத்து அவர் மீசாமிலுள்ள கிறீஸ்தவர்கள் இழுத்துச்சென்று பெண்களும் ஆண்களும் கண்ணீர்சொரிந்து புலம்ப, மகா வண. விக்கார் செனறல் சுவாமியவர்களால் கடைசிஆசிகூறியபின் அடக்கஞ்செய்யப்பட்டது. இவ்வரிய குரவரையிழந்து துன்புறும் மேற்றிராசனத்தார், உறவினர், இவரது மீசாமிலுள்ளார் யாவருடனும் நம்மனுதாபமுமிருக்கிறது.

## பச்சாத்தாபக் கவிதைகள்

### வெண்பா

ஆருங் கிறீஸ்தாண்டு ஆயிரத்தொன் பானூறெ
டாருமுப்பத் தெட்டுவைசா கம்பன்மூன்—றூர்வெள்ளி
அஞ்சுகா யத்தமல னார்கமலப் பாதகதி
பெஞ்சமீன் நங்குருபெற் றூர்.

மாசில்குலோத் துங்க முதலிவழி மாதகல்வாய்
மாசின்மலை யுச்சி மணிவிளக்காய்த்—தேசு
விளங்குபென்ச மின்குருவை விட்டுச் சிறகு
இழந்த பறவையொத்தோ மே.

சித்திரமார் கல்லறையும் சிங்கா சனமுமின்னும்
சித்திரஞ்சேர் சேத்திரத்தில் செய்யபல—சித்ரப்
பணியும்நம் மாலயத்திற் பண்ணியகை மாறில்
பணியமறக் காதெம் பதி.

செத்தீ னெனுஞ்சொற் செவிப்படநம் மூரிலே
உற்று ரிலார்வேதை யுற்றுக்கண்—மெய்த்தோய
நீர்விடா தேயிருந்தார் நின்மெய் மறப்புறினும்
பேர்மறக்கப் போகாதே பின்.

எங்கள் திருக் கோயிற் பணியையினி தாய்முடித்துப்
பங்குபற்று வீரென்று பார்த்திருந்தோம்—துங்கம்
பொலியும் முயற்சி பொருந்தவிடா தெம்மை
நலியவைத்துச் சென்றீரிந் நாள்.

அன்புக் கிருப்பிடமே ஆதரவே நீருமெமைத்
துன்புறவைத் தேகியதென் தொல்புவிநின்—இன்பமொழி
கேட்டு வணங்கிக் களிர்ந்திருப்ப தெந்நாளெம்
வாட்டந் தவிர்ப்பதுயார் வந்து.

V. M. S.
வயாவிளான் கிழக்கு

---

## கடலாமை எண்ணெய்

அரசாங்க வர்த்தகப்பகுதிக் கொம்மிஷனர் கடலாமைகளிலிருந்து எடுத்துத் தயாரிக்கப்படும் எண்ணெயை விற்பனவுசெய்வதற்கான ஒழுங்குகள் செய்துவருகின்றார். யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கப்பாலுள்ள கடலிலும், இலங்கையின் தென் கடற்கரை நீளமும் ஆமைகள் பெருந்தொகையாகப் பிடிக்கப்படுகின்றன. தற்போது ஆமை பிடிப்பாருக்கு அதன் மாமிசுத்தாலும், ஓட்டாலுமே வருமானம் கிடைத்து வருகிறது. இனிமேல் ஆமை எண்ணெயிலிருந்தும் அவர்களுக்கு வருமானங் காண்பிக்கவே அரசாங்க வர்த்தகப்பகுதி வேலை செய்து வருகின்றது.

## சுகாதார வாரமும் பொருட்காட்சியும்

இந்தமாசம் 7-ந் திகதி வடமாகாண ஏசன்றர் அவர்களால் யாழ்ப்பாணத்தின் எட்டாவது வருட சுகாதார வாரமும், சுகாதார காட்சியும் திறந்து வைக்கப்படலாயின. சேன். சாள்ஸ் கலாசாலையிலே திறப்புவிழாவின் பின்னர் கலாசாலை மண்டபத்தின்கண் யாழ்ப்பாணச் சுகாதார சங்க தலைவராகிய கனம் ஐசெக் தம்பையா அவர்களது அக்கிராசனத்தின்கீழ் ஓர் பகிரங்கக் கூட்டம் நடந்தேறியது. அன்று முதல் தினமும் பகலிலே சுகாதாரக் காட்சியும், இரவிலே டக்றர்மார் பலராலும் சுகாதார சொற்பொழிவுகளும் சிறப்பாக நடைபெற்றன.

## சிறுமியர்க் கிதோபதேசம்?

"உதட்டைச்சுழித்தல் உடலைநெழித்தல்
உரத்துப்பேசல்நெட் டுமுறலூற்றைச்சொல்
கைகால்நெழித்தல்கண் ணிரட்டுசேட்டை
தந்தைதாய்மூத்தோர் தற்பேணுமை
உடலுடைப்புனிதம் உணராதிருத்தல்
தற்கொப்பில்லார் தன்னெடுபழகல்
இக்குணப்பெண்மகா ரிடமிருக்கொணுதாம்.
அச்சம்மடம்நா ணம்பயிர்ப்பிளமையிற்
கற்கப்படுமக் கலையிற்றலையாம்"

K. M. C.
உரும்பராய்,

---

## ராஜகுமாரியின் இணையற்றகாதல்

பெரிய யுத்தத்தில் வெற்றி பெற்று ஜயத்துடன் திரும்பினுன் தேவதத்தன். அப்போது அவனுக்கு வயது பதினெட்டுத்தான். அரசன் அவனை மெச்சி, அவனுக்கு மந்திரி பட்டத்தையும் கொடுத்துவிட்டான். அரசனின் புத்திரி விமலா அது கண்டு களித்தாள். தேவதத்தனும் விமலாவும் பாலிய சிநேகிதர்கள். இருவரும் ஒரே குருவினிடம் பாடம் கற்றுக் கொண்டவர்கள்.

அவர்கள் படிக்கும் காலத்தில், தேவதத்தனைக் குரு ஏதாவது கண்டித்தாலும் விமலாவின் கண்ணில் நீர் பெருகிவிடும். அதேபோல் விமலாவைப் பற்றி ஏளனமாக யாராவது சொன்னுல் தேவதத்தன் அவர்களுடன் சண்டைக்குப் போய்விடுவான். அவர்கள் நட்பு வளர்ந்து வந்தது.

தேவதத்தன் குதிரையேற்றம், வில் போர், வாட்போர் முதலியவற்றில் தேர்ச்சி பெற்று வந்தான். பெரிய யுத்தங்களில் தானே தலைமை வகித்துச் சென்று வெற்றியும் பெற்று வந்தான். ஒவ்வொரு தடவை யுத்தத்துக்குச் செல்லும்போதும் விமலாவிடம் உத்தரவுபெற்றுச் செல்வான். தன் காதலன் திரும்பிவர வேண்டுமென்று விமலா கடவுளைப் பிரார்த்திப்பாள்.

சில வருஷங்கள் சென்றன. அரச குமாரிக்கு வயது பதினெட்டு ஆயிற்று. அவளுக்கு மணம் செய்விக்க யோசனை செய்தான் அரசன். தன் மகளிடம் ஓர் அரச குமாரனின் படத்தைக் காண்பித்து, "இவனையே உன் மணுளனுகத் தீர்மானம் செய்திருக்கிறேன்" என்றுன்.

விமலா சற்று நேரம் திகைத்து விட்டாள். பிறகு, "தந்தையே, இந்த ஜன்மத்தில் தேவதத்தனைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லை யென்று சபதம் செய்திருக்கிறேன்" என்றுள். அரசன் வெகு கோபமாய் அவ்விடத்தை விட்டுச் சென்றுன்.

மீசை துடிக்கச் சபைக்குள் நுழைந்த அரசனைக் கண்டு சபையோர் நடுங்கினர். அரசன் மந்திரியை நோக்கி, "அடே பிச்சைக்காரப் பயலே! என் நாட்டைவிட்டு வெளியே செல். என் மகள் மனதைக் கலைத்து விட்ட துரோகி! என் முன் நில்லாதே போ வெளியே!" என்றுன்.

மந்திரி பதிலே சொல்லவில்லை. தன் ஆசனத்தை விட்டு இறங்கி, குனிந்த தலையுடன் வெளியேறினுன். அதே சமயம் தேவதத்தனுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை யறிந்த விமலா மூர்ச்சை யடைந்தாள்.

ஒரு வருஷம் ஓடி மறைந்தது. தேவதத்தன் இல்லாத அரசசபை ஒளியிழந்திருந்தது. அவன் எங்கு சென்றுனென்று யாருக்கும் தெரியாது. ஏதோ ஒரு காட்டில் அவன் ஒரு பெரிய சைன்யம் தயார் செய்து கொண்டிருப்பதாகவும், அந்த ராஜ்யத்தைத் திடீரென்று எதிர்க்கலாமென்றும் ஜனங்கள் பேசிக்கொண்டனர்.

இந்தச் சமயத்தில் பக்கத்து நாட்டுச் சிற்றரசன் ஒரு பெரும் படையுடன் எதிர்த்தான். அரசனும் தன் சேனைகளைத் திரட்டிச் சென்று யுத்தம் செய்தான். இதுவரை தேவதத்தன் சேனுதிபதியாயிருந்தானுதலால், வெகு திறமையுடன் போர்புரிந்து சைன்யங்கள் வெற்றிபெற முடிந்தது. இப்போது அவ்வாறு இல்லை. அஸ்தமனத்துக்குள் அரசன் சைன்யம் முறியடிக்கப்பட்டு ஓட ஆரம்பித்தது. அரசன் கலங்கினுன். கைகளைப் பிசைந்தான். என்ன செய்வதென்று தெரியவில்லை அரசனுக்கு.

அப்போது ஒரு குதிரை வீரன் பக்கத்திலிருந்த ஒரு காட்டிலிருந்து வந்தான். அவன் பின்னுல் ஒரு பெரிய சைன்யம் வந்தது. அந்தக் குதிரை வீரன் யார், தெரியுமா? தேவதத்தன்தான். அந்தச் சைன்யம் சிற்றரசன் சைன்யத்தை நிறுத்தித் தவிடுபொடி செய்தது. "தேவதத்தன் இல்லை, நாம் இலகுவாய் ஜயிக்கலாம்" என்று எண்ணி வந்த அச் சிற்றரசன், அவனைக் கண்டதும் உளறியடித்துக் கொண்டு ஓடியே போய்விட்டான்.

அரசன் தேவதத்தனைத் தழுவிக்கொண்டான். "நான் இதற்குள் என் ராஜ்யத்தையே இழந்திருப்பேனே, உன் உதவியில்லாவிட்டால்! சற்றும் யோசியாமல் உன்னைத் துரத்தினதை மன்னித்துவிடு; இந்த உதவிக்குக் கைம்மாறுக என் உயிரை வேண்டுமானுலும் கேள், தருகிறேன்" என்றுன்.

தேவதத்தன், "எனக்குத் தங்கள் உயிர் வேண்டாம், விமலாவைக் கலியாணம் செய்து கொடுங்கள்" என்றுன். அரசன் சம்மதித்தான். கலியாணமும் வெகு விமரிசையாய் நடந்தது.

---

நல்லார்கட்பட்ட வறுமையி னின்னுதே கல்லார்கட் பட்ட திரு.

# ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் சரித்திரம்

திரு G. ஷண்முகம் B. A.
நவிண்டில் - பிரமஸ்ரீ சு. சி. குருபாரதிகள் கேள்விப்படி.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்(து)
இறந்தாரை யெண்ணிக் கொண்டற்று"—

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனூர் திருவாக்கின்படி உலக மாயையாகிய, காமினி, காஞ்சனம், இரண்டையும் அறவே துறந்த பெரியோர்களின் பெருமை சாலவும் பெரிது. இத்தன்மை வாய்ந்த மகா புருஷர்களின் சரித்திரம் நம்போன்ற மானுடர்களுக்கு சம்சார சாகரத்தைக் கடக்க ஓர் அரிய தெப்பமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

திருவண்ணாமலையானது பஞ்சபூத ஸ்தலங்களில் தேயுஸ்தலமாகும். அயனும் அரியும் சிவபெருமானது அடிமுடி காணாது அவஸ்தைப் பட்டதும், நினைக்க முத்தி தாவல்லதெனப் பெரியோர்களால் புகழப் பட்டதுமான இத்தலத்தின்கண் பல ஜீவன்முத்தர்கள் திகழ்ந்திருந்தனர் என நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். இன்று ஜீவகசையில் வீற்றிருக்கும் மகான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் எனத் தவப்பெயர் பூண்ட பெரியார்.

## பிறப்பும் இளமைப்பருவமும்.

இவர் மதுரைமா நகருக்கு சுமார் 30 மைல் தூரத்திலுள்ள திருச்சுழியல் என்னும் ஸ்தலத்தின்கண் இருந்த வக்கீல் ஸ்ரீமான் சுந்தரமையர் என்ற பிராமணோத்தமருக்கும் அழகம்மையென்ற அவர் தருமபத்தினியார்க்கும் கலி 4980 பிரமாதி வருஷம் மார்கழி மாதம் 16-உ (30th December 1879) சோமவாரம், புனர்பூச நக்ஷத்திரம் உதயாதி 48 நாழிகைக்கு மேல் துலாலக்னத்தில் குருதசை 5 வருஷம் 6 மீ சேஷ மிருக்கையிற் பிறந்தார்.

இவர் அவதரித்தநாள் திருவாதிரையாகிய ஆருத்ரா தரிசன நன்னாள். அவதாரபுருஷர்கள் இவ்வுலகில் தோன்றுங்காலத்து ஓர் அற்புத நிகழ்ச்சி நடப்பதுண்டு. அங்ஙனமே இவர் பிறந்தநாளன்று பிரசவம் பார்க்கவந்த கண் தெரியாக் கிழவி ஒரு பேரொளி கண்டாள். இவர் இயற்கைப்பெயர் வேங்கடராமன். இதிலுள்ள 'ராமன்' என்பதுதான் பிற்காலத்தில் 'ரமணன்' எனத் தவப்பெயராகத் திரிந்தது. தமது சிறுவயதில் இவர் சரீரப்பயிற்சி முதலிய விளையாடல்களில் அதிக ஊக்கமுடையவராக இருந்தாரேயன்றிப் படிப்பில் அவ்வளவு அக்கரை காட்டவில்லை. ஆயினும், ஒருவர் சொல்லக் கேட்டவற்றை அப்படியே ஒப்புவிக்கும் அபார ஞாபகசக்தியும் ஏகாக்கிரத்தன்மையும் வாய்ந்த மேதாவி, முதன்முதலில் திருச்சுழி எலிமெண்டரி பாடசாலையிலும் பிற்பாடு திண்டுகல்லில் 5-ம் வகுப்பும் மதுரை ஸ்காட்ஸ் மிடில் ஸ்கூலில் 6-ம்வகுப்பும் படித்தார். அப்பொழுது இவர் தந்தை காலமாகவே, இவர் தம் சகோதரர்களுடன் சிறிய தந்தையர்களாகிய சுப்பையர் நெல்லையப்பையர் இவர்கள் ஆதரவின்கீழ் வளர்ந்து வந்தனர். அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூலில் பத்தாவது (Sixth Form) வரை படித்தார். சமய நூல்களில் பெரியபுராணத்தைத் தவிர வேறு ஒன்றையும் இவர் அக்காலத்தில் அறியார்.

ஆனால் தமது பால்ய வயது முதற்கொண்டே இவருக்கு அருணாசல ஸ்மரணை தன்னில் தானாக வே உண்டாயிருந்தது. அருணாசலம் என்பது வைகுண்டம், கைலாயம், சுவர்க்கம்முதலியவற்றிற்கும் மேம்பட்டதாயும், எவராலும் அடைதற்கரிதாயும் இவர்க்கு விளங்கிற்றேயல்லாது அது பூமண்டலத்திலுள்ள ஒரு சிவஸ்தலமென அறியார். பூரண தேவானுக்கிரகத்தினால் மானுடகுருவில்லாமல் பேரருளாலே தமது யதார்த்த நிலையை அடைந்து ஜீவன்முத்தராய்த் திகழவே இவருக்கு அருணாசல ஸ்மரணை தன்னில் தானாய் உண்டாயிற்றுப்போலும்! இங்ஙனம் சிலகாலம் சென்றது. பிறகு மன்மத வருஷம் கார்த்திகை மாதத்தில் (November 1895) ஓர் நாள் தமது உறவினர் ஒருவரால் திருவண்ணாமலையே அருணாசலமெனத் தெரியலானார். பின்னர் இதைப்பற்றி இவர் ஒரு பொழுதுஞ் சிந்தித்திலர்.

## ஞான உதயமும் துறவும்

பல மாதங்களுக்குப் பிறகு துர்முகி வருஷாரம்பத்தில் தமது திருமேனியில் ஓர் எரிச்சலுடன் தீவிர மரணபயமும் இவருக்குத் திடீரென உண்டாயிற்று. ஜன்மாந்தர புண்ணிய பரிபாகத்தினாலோ அல்லது அவதார புருஷன் என்ற காரணத்தை முன்னிட்டோ இவ்வகையான தெய்வீகவுணர்ச்சி இப்புண்ணியசீலருக்கு உண்டாக ஏதுவாயிற்றுப்போலும்! அநேகமாய் ஒவ்வொரு அவதார புருஷரும் ஏதோ ஒரு வெளித் தூண்டுதலிற்றான் ஞானநிலையை நாடினதாகத் தெரிகிறது. உதாரணமாக அவதார புருஷராகக் கருதப்படும் புத்தபகவான், தமது அழகிற்சிறந்த வாழ்க்கைத் துணைவியாகிய யசோதரையுடன் ராஜபோகங்களை இன்பமாக அனுபவித்துவரும் நாளில், பிணிவாய்ப்பட்டுத் துன்புறும் ஒரு குஷ்டரோகியையும், மூப்பினால் தள்ளாடிக் கஷ்டப்படும் ஒரு வயோதிகனையும், மயானத்திற்குக் கொண்டுபோகப்படும் பிணமொன்றையும் முறையே கண்ணுற்றார். இக்காட்சிகளே இவர் உடனே துறவறம் மேற்கொள்ளவும், அதன் பயனாக நிர்வாண பதவியைப் பெறவும் ஏதுவாயிற்று. அங்ஙனமே ரமணருக்கு அத்தூண்டுதல் மரணபயமாக வந்ததெனக் கூறலாம். அதன் பயனாக இவர் தமது சரீரத்தைப் பிரேதமெனப்பாவித்தார். அதனால் தேகாத்மபுத்தி தம்மிடமிருந்து பூரணமாய் விலக, உண்மையான 'நான் யார்' என்ற விசாரம் இவருக்குத் தன்னில் தானாய் உதிக்கலாயிற்று. இவ்வகையான ஆத்ம நிஷ்டையின் பயனாக இவர் மனம் சொரூபப் பிரகாசத்தில் லயித்து அந்த ஆத்ம சக்தி "நான் நான்" என்று தானாகவே உள்ளத்தில் ஸ்புரிக்க ஆரம்பித்தது. (வேதாந்த பரிபாஷையில் இந்நிலையை 'அஹம் ஸ்புரிப்பு' என்றும் 'ஆன்ம விஞ்ஞான'மென்றும் சொல்வார்கள்)

இந்த ஆச்சரிய சம்பவம் நடந்த பின்பு இவர் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. ஏகாந்தப் பிரியமும், தாழ்வு: பொறுமை முதலிய குணங்களும் இவரிடம் அதிகரித்தன. மேலும் இவர் அடிக்கடி ஆசனத்தமர்ந்து கண்மூடி நிஷ்டைகூடுவார். மதுரை மீனாக்ஷீசுந்தரேசுவரர் ஆலயத்துக்குச் செல்லும்போதெல்லாம் அங்குள்ள அறுபத்துமூவர் முன்னும், வெள்ளியம்பலத்திலுள்ள நடராஜர் சந்நிதி முன்னும் அன்பினால் பரவசப்பட்டு அகநெக்குருகிக் கண்ணீருகுப்பார். இங்ஙனம் சுமார் ஆறு வாரங்கள் கழிந்தன.

பின்னர் ஒருநாள் அதாவது அதே துர்முகி வருஷம் ஆவணி மாதம் (29-8-1896 சனிக்கிழமையன்று இவர் பெயின் என்பவர் எழுதிய ஆங்கில இலக்கணத்தி (Bain's English Grammar) லிருந்து ஒரு பாடத்தைப் பார்த்து எழுதிக் கொண்டிருந்தார். அன்று உபாத்தியாயர் தந்த பாடத்தை சரியானபடி உருத்தள்ளாதபடியால் இத்தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. மனம் அதன் உற்பத்தி ஸ்தானத்தையே நாடும்போது எங்ஙனம் பள்ளிப்பாடங்களைப் படிக்க முடியும். இவர் இரண்டுதரம் எழுதியவுடன் மனம் அமுக்கப்படவே நிஷ்டையில் கண்மூடி உட்கார்ந்துவிட்டார். இதனைக் கண்ணுற்ற இவர் தமையனார் நாகசாமி ஐயர் என்பார் இவரைத் திருத்துங் கருத்துடையாராய் "இப்படிக்கெல்லாம் இருப்பவனுக்கு இங்கென்னவேலை" எனக் கடிந்துரைத்தார். இதனைத் தெய்வவாக்காகக்கொண்ட ரமணர், தமக்குத் திடீரென்று தற்செயலாய்ப் பழைய அருணாசல ஞாபகம் வரவே திருவண்ணாமலைக்குப் போவதே சரியெனத் தீர்மானித்தார். மின்சார சக்தியை விளக்குவதற்காகத் தம்மை உபாத்தியாயர் அன்று பள்ளிக்கு வரச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. உடனே அதைப்பற்றித் தமது தமையனிடம் பிரஸ்தாபிக்க, அவர் தம்முடைய சம்பளத்தை எடுத்துக்கொண்டுபோய் உபாத்தியாயரிடம் கொடுக்கும்படி சொல்லி ஐந்து ரூபாய் அவரிடம் கொடுத்தார். அவ்வைந்து ரூபாயில் மூன்றைமட்டும் எடுத்துக்கொண்டு ஒரு கடிதத்தில்

"நான் என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்வூரைவிட்டுக் கிளம்பிவிட்டேன். இது நல்ல காரியத்தில் தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்படவேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவுசெய்யவேண்டாம். உன் சம்பளத்தை இன்னும்செலுத்தவில்லை. ரூ 2 இதோடு கூட இருக்கிறது.

— — இப்படிக்கு"

என்று எழுதி வைத்துவிட்டுப் பழைய தேசப் பட (Old Atlas) மொன்றின் உதவியால் திருவண்ணாமலையானது திண்டிவனத்திற்குச் சமீபமென்று அறியலானார். வண்டி நேராகத் திருவண்ணாமலை போகும் விஷயம் இவருக்கு அப்பொழுது தெரியாது. ஆகையால் பளிங்கைப்போன்ற சுத்தமான ஹ்ருதயம் வாய்ந்த இவ்வகத்துறவி றயிலடிக்குச் சென்று திண்டிவனத்திற்கு டிக்கற் வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறினார்.

றயில்ஏறிய இப்பெரியார் வேறு எவ்வித நினைவிற்குஞ் சிறிதும் இடங்கொடாது தமது ஆத்ம நிஷ்டையிலே ஆழ்ந்திருந்தனர். வழியில் ஓர் மஹம்மதிய பெரியார் ஒருவரால் திருவண்ணாமலைக்கு நேராக றயில்வண்டி போவதாக அறியலானார். ஆதலின் இவர் விழுப்புரத்தில் இறங்கித் தமது பசிப்பிணியைச் சிறிது ஆற்றிக்கொண்டபின், மிஞ்சின சிறு தொகையைக் கொண்டு பிறவிப்பிணி தீர்த்தற்பொருட்டு மாம்பழப் பட்டு வரையில் வண்டியிற் சென்றார். கையில் பணமில்லையாதலின் அங்கிருந்து சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள அறையணி நல்லூர் என்ற ஸ்தலத்திற்குக் கால் நடையாகச் சென்று ஆங்குள்ள கோயிலுட் புகுந்து ஆழ்ந்த சமாதியில் அமர்ந்திருந்தனர். அங்ஙனம் இருக்குங்கால் இவர் ஒரு ஜோதியை தரிசிக்கலானார். பிறகு அக்கோயில் சுயம்பாகியுடன் சுமார் ஆறு பெர்லாங் தூரத்திலுள்ள கீழூருக்கு வந்தார். அங்கு வீரட்டேஸ்வரருக்கு பூசை செய்யும் பட்டரைச் சிறிது அன்னம் கேட்கவே அப்பட்டர் கொடுக்க மறுத்து விட்டார். பக்கத்திலிருந்த மேளகாரன் 'என் பங்கை இவருக்குக் கொடுங்களையா' என்று பரிந்து தன் பங்கை அன்புடன் இவருக்கு ஈந்தான்.

மறுநாள் கோகுலாஷ்டமி தினம் (31-8-1896) திருவண்ணாமலையோ இன்னமும் 20 மைல் தூரத்திலிருக்கிறது. றயில் செலவிற்கு கையில் பணமில்லை. ஆயினும் திருவருணை ஞாபகம் மேலிட்ட நமது பாலஸ்வாமிக்குத்தகுந்தவழி தென்படாமலா போகும். அவ்வூரிலுள்ள முத்துக்கிருஷ்ண பாகவதர் என்ற பிராமணரிடம் தமது கடுக்கன்களை அடகுவைத்துப்பெற்ற பணஉதவியால் மறுநாள் (1-9-96) திருவண்ணாமலை போய்ச் சேர்ந்தார். (வரும்)

## உபசாரணைக் கூட்டம்

புதிதாக J. P. பட்டம் பெற்றவரான திரு. இராசரத்தினம் அவர்களுக்கு மயிலிட்டிக் கோவிற்பற்று வாசிகளால்சென்ற 21-ந் திகதி ஓர் உபசாரணைக் கூட்டம் வயாவிளான்பாடசாலையில் நடைபெற்றது. கூட்டத்திற்குச் சமுகங் கொடுத்தோர் யாவரும் ஷெ J. P. அவர்களுக்கு வந்தனோபசாரங்கூறி மகிழ்ந்து சென்றனர்.

## உபநயனக் கொண்டாட்டம்

தும்பளை வாசரும், வதுளைக் கதிரேசன்கோவில் பிரதான அர்ச்சகாசாரியருமான பிரமஸ்ரீ. க. யோகீஸ்வர ஐயர் அவர்களின் கனிஷ்ட புத்திரன், ஸ்ரீ. சாம்பசிவசர்மாவுக்கு சித்திரைமீ உரு-ந் உ (5-5-38) வியாழக்கிழமை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்திலே உபநயனதாரணம், உபதேசம் முதலியனவும், அடுத்த நான்குநாளும் சமிதாதானம் முதலியனவும் சுற்றமித்திரர் சமுகத்தில் சிறப்புற நடந்தேறிற்று.

## ஓர் புதிய துறைமுகம்

தொண்டமனாற்றுத் துறைமுக நிர்வாகசபையால், தொண்டைமனாறு ஒரு பெரிய துறைமுக மாக்கப்படவேண்டுமென்பதற்குரிய காரணங்களைத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்துக்காட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கின்றனர். ஏறக்குறைய 50,000 ரூபா செலவில் இது முடியும் என்றும் கூறப்படுகிறது.

## கர்மநோய்கள் உண்டாவதற்குரிய
# மூலகாரணங்களின் சுருக்கவிளக்கம்

(காப்பு)

"பராபரையாய் நிறைந்துநின்ற சத்திகாப்பு
பாதிமதி தரித்தசடைச் சிவனேகாப்பு
கரிமுகவ, னின்ருள்காப்பு
தராதலமீ ரேழ்வகுத்த மறையோன்காப்பு
திருமால் காப்பு.

"பூதலத்தோர்க்காகப் பொதிகைமுனி நாதனுமுன் காதலுற்றுச் சொன்னகர்ம காண்டத் தியல்பு சொல்வாம்." அகத்தியமாமுனிவர், சிவபிரான், சுப்பிரமணியப் பெருமான் இவர்களின் திருவருளாற் சன்ம, கன்ம, காண்ட நூல்களைப் பாடி, இயற்றினர்.

(மநுநீதிகாதல்நூல்)

### கர்மவியாதி வந்த காரணத்தைச் சொல்லுகிறேன்

"ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோபம்படச்சினந்து கொடுங்கோபஞ்செய்வதினுல்
கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினுல்
தப்பிதமாய்ப்பித்தந் தலைக்கேறியேபிதற்றி
பண்பாய்பலகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகதட்சணு மூர்த்தி மொழிந்தனரே."

நந்தவனமழித்தல் நாதாக்களைப்பழித்தல்
நந்தவனத்தில்மல மாத வரும்பூகொய்தல்
திட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்கு
குட்டநோய்வந்து கொடுமைசெய்புமென்றனரே.

சூரியனைத்தோத்திரியாத் தோஷமதனுலும்
கீரினுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுச்சுட்டதினுல்
நல்லநிழல்மரத்தை நன்குரித்துக்கொண்டதினுல்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனைவெட்டினதால்
பசித்தோரிருக்கவதைப் பாராமலுண்டதினுல்
நிசமாய்ச்சுரதோஷம் நேருமென்றேயுரைத்தார்.

சற்குருவைத்தூஷணித்தோர் தண்மையில்லாக்கோபத்தாலும்
முக்கியர்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும்
பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலைகா யுதிரவடித்தவர்க்கும்
வண்டுகடிகரப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்
மாமுனிவரும்.

பத்தர்சிவபத்தர் பரசிவமேதைகளைச்
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும்
வில்லாலுமம்பாலும் வெடிமருந்துகுண்டாலும்
கொன்றகொடும்பாவிகட்கு கொடிதானமார்பாணி

கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம்
தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார்
ஊனுணவைத்தின்ன உயிர்வதைகள்செய்வதினுல்

மானுர்கற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால்
புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியர்களைக்கெடுத்தும்
நிறுப்பதளப்பதுவும் நிறைகள்குறையவிற்றும்
மாறுபடநீரில் மலமூத்திரங்கள்விட்டோர்
அராகதமாயிவ்வாறு துன்பங்கள்பட்டும்
கிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தார்.

மேலும், தொன்னூற்பிரமாணப்படி கர்மவியாதிகள் உண்டாகும் மூலகாரணங்களைப் பூரணமாய் விளங்கச்சொல்லப் புகுந்தோமும் இவ்விஷயமானது மிக்க நீடிக்குமென நினைந்து, அவற்றுட் சிற்சிலவற்றைச் சுருக்கி, இங்கே கூறுவாம்.

பிரமகத்தி; குருத்துரோகம்; குருதாரகமனம்; ஆலயத்தீபம், முதலியவற்றைத் திருடல்; பிறரின் கல்வி, செல்வம் இவற்றைக் குறித்துப் பொறாமைகொள்ளல், மற்றவர்கள் மனம்வருந்தும்படி பற்பல தீவினைகளைச்செய்தல், செய்வித்தல் ஆதியாமிப்பாவங்களைச் செய்தவர்களுக்கு, க்ஷயரோகமும், விசுவாசமுள்ளவர்களை விஷமூட்டிக் கொன்றவர்களுக்கு, இடதுபக்கம் பீலிகாரோகமும்; அன்னியர்களைப் பரிதபிக்குமாறு உபத்திரவஞ் செய்தவர்களுக்கு, மூலரோகமும்; நற்காரியங்களைச் செய்யுந்தோறுங் கோபங்கொள்ளுதல்; பிறர் வீட்டிற் றீவைத்தல்; வைப்பித்தல் ஆகிய பாவங்கள் செய்தவர்களுக்கு, உஷ்ணசுரம் முதலிய ரோகங்களும், செய்நன்றி மறந்தவர்களுக்கு, சுவாசகாசமும்; கோட்சொல்பவர்க்கு, வயிற்றிற் கிருமிரோகமும்; இலஞ்சம் வாங்குவோர்க்கு, பவுந்திரமும்; சிவபிரானையும், அவருடைய மெய்யன்பர்களையும் வந்தியாது நிந்திப்பவர்களுக்கு, பற்பல கொடிய ரோகங்களும், முறையே உண்டாகும் எனப் பல நூல்களும் சொல்லும்.

(பிரமாணம்.) "மெய்ப்பொருள்காட்டி உயிர்கட்கருணுகித் துக்கங்கொடுப்பது நூல்; என்றுமுண்டாகி இறையால் வெளிப்பட்டு நின்றது நூலென்றுணர்."

(தொடரும்)

இ. மு — புத்தூர்

## பிதாவினுடைய சென்மநாளில் புத்திரன் பிறந்தால் பலாபலன்.

தந்தைதாய்புவி யவதரித்தநாளினில்
அந்தநல்லோரை யினங்கிசத்தினின்
முந்தியமகன்மகள் முறையிற்றோன்
றிடில் [மே.
சிந்தைவெந்துயரமு மழிவுஞ்சேரு

இ—ள். பிதா மாதா பிறந்த நட்சத்திரத்தில், அல்லது அந்த நட்சத்திர ராசியில், (நட்சத்திர பாதத்திற்குரிய) அங்கிசையில் புத்திரன் புத்திரிகள் பிறந்தால் முறையே பிதா, மாதா இவர்கட்கு (புத்திரன் பிறக்கின் பிதாவுக்கும், புத்திரி பிறக்கின் மாதாவுக்கும்) மனத்துக்கமும், கஷ்டமுமுண்டாம்.

இங்கே ஓரை என்பதற்கு அந்த நட்சத்திரத்திற்குரிய இராசியென்றே பொருள் கொள்ளவேண்டும். சிலர் ஓரை என்பதற்கு உதயலக்கினமெனப் பொருள் கொள்கின்றார்கள். அது பெரும் பிழையாம். "அங்கி சத்தினின்" என்பதற்கு சந்திரனிருந்த நவாம்சராசி எனக்கொள்க. மூன்றும் சீரில் "முந்திய" என்ற பதமிருத்தலில் இக்குற்றம் தலைப்பிள்ளைக்கேயன்றி ஏனையோர்க்கல்ல என்பதாக அறியக்கிடக்கின்றது. ஆனாலும் மூதனூல்களில் அப்படிக் காணப்படாமையின் எல்லாப் பிள்ளைப்பேறுகளுக்கும் இப்பலன் பொருந்துமென்பதே ஆன்றோர் கொள்கை.

பிதாவினுடைய சென்ம நட்சத்திரத்திற்கு 8-7-10-வது நட்சத்திரங்களில் பிறந்தவன் புத்திர பௌத்திரர்களுடன் கூடினவனுய், தகப்பன் எடுத்துக்கொண்ட நன் முயற்சிகளைத் தகப்பனது இஷ்டப் பிரகாரம் செய்பவனுகவாவது அல்லது பிதிர் கருமங்களைச் செய்பவனுகவாவது, இருப்பான். தகப்பனுடைய 27-வது நட்சத்திரம் அல்லது, 11, 12, 13-வது நட்சத்திரங்களில் பிறந்தவன் தூரதேசத்திற்குச் சென்று வாழ்வோனும் தகப்பனுக்குத் துக்கத்தையுண்டாக்குபவனுமாவான்.

பிதாவின் ஜென்ம நட்சத்திரத்திற்கு 8, 9, 10, 11, 12, 27, இவைகளில் புத்திரன் பிறந்த பலனைக் கூறியவர் ஏனைய நட்சத்திர பலனைக் கூறாது விட்டுவிட்டார் அறிக.

"நத்திய பிதாவின் சன்ம ராசிக்கே
ஆறெட்டாக
சத்துரு ராசிதன்னில் தனயனே
பிறக்குமேனும்
உத்தம பிதாவின் சன்ம முற்றநாள்
பிறக்குமேனும்
மைத்தடங்கண்ணினுளே வளர்பிதா
அரிட்டந்தானே"

என்னுஞ் செய்யுளினுலே பிதா சனனமான சந்திர லக்கினத்திற்கு 6, 8, ஆகிய பகைராசிகளில் சந்திரனிருக்கப் புத்திரன் பிறந்தாலும் பிதா சனனமான நட்சத்திரத்திற் புத்திரன் பிறந்தாலும் பிதாவுக்குத் துன்பமுண்டாகும் என வற்புறுத்தியிருக்கின்றார் "பிதாவின் சன்மராசி" என்ற பிரயோகமிருத்தலால் பிதாவின் சந்திரலக்கினமென்றே பொருள் கொள்ளல் வேண்டும். இதனுலும் புத்திரன் பிறந்தால் பிதாவுக்குத் தோஷமென்றும் பெண் பிறந்தால் தோஷமில்லையென்றும் ஏற்புடைக் கோடலால் பெண் பிறந்தால் தாய்க்குத் தோஷமென்றும் அறியக் கிடக்கின்றது.

ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்.
சுதுமலை.

## சந்தா விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

இலங்கை,இந்தியாவுக்கு ரூபா 2½
மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5.

## விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

சிறு விளம்பரங்களுக்கு ரூபா 1¼.
கலம் ஒன்றுக்கு ரூபா 3

### தோத்திரத்திரட்டு

சமயகுரவர்களால் பாடப்பெற்ற அருட்பாக்களாகும் தேவாரம் திருவாசகம், திருத்தாண்டகம், திருப்புகழ் முதலியன அடங்கியுள்ளது. கலிக்கோக் கட்டு ரூபா 1 சதம் 25.

### சிவராத்திரிபுராணம் மூலமும்-உரையும்

இது சைவசமயிகளுக்கு இன்றியமையாத அரிய நூல். இதன் விலை ரூபா 1· சதம் 50.

### ஆசௌச தீபிகை

இது அன்னலை பிரமஸ்ரீ ஆ. சபாரத்தினக் குருக்களவர்களால் இயற்றப்பெற்றது. சைவசமயிகள் ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இதன் விலை சதம் 40.

இப்பிரதி தேவையானோர் ஆக்கியோனிடத்திலும் எமது அச்சியந்திரசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

### விசேஷ அறிவிப்பு

## ஞானசவுந்தரி அம்மானை

பல வருடங்களாய் அச்சுவேலி "ஞானப்பிரகாச" அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியான இப் புத்தகம், தற்போது V. M. சூசைப்பிள்ளையால் வயாவிளான் "ஆனந்தகுமரன்" அச்சகத்தில் அழகுற அச்சடிக்கப்பெற்று விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. விலை சதம்-50

இது மாத்திரமல்ல வேறுவித மான அம்மானைகள், நாடகங்கள், கீர்த்தனைகள், டிராமாக்கள், நவல்சுகள், வைத்திய நூல்கள் முதலான சகல புத்தகங்களையும் பெற்றுக்கொள்ளலாம். தொகையாயெடுப்பவர்களுக்கு விசேஷமான கழிவு கொடுக்கப்படும்.

வீ. பீ. பீ. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:-
வ. மூ சூசைப்பிள்ளை
வயாவிளான் கிழக்கு
அச்சுவேலி போஸ்டு
யாழ்ப்பாணம் (இலங்கை)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா" விலுள்ள ஆனந்தகுமரன் அச்சுநிலையத்தில் 1938-ம் வருஷம் வைகாசிமீ 25-ந்திகதி புதன்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.